# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கிருஷ்ணகிரி பிரிவு அலுவலகத்தை அணுகி தான் புதிதாக கட்டிய பால் குளிரூட்டும் மையத்திற்கு மும்முனை மின் இணைப்பு வேண்டி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம், கிருஷ்ணகிரி மாவட்டம், கல்லவி அலுவலகத்தில் விண்ணப்பித்ததாகவும், விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மின் இணைப்பு வழங்க திரு.ராஜேஷ், இளநிலை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.10,000/- கொடுக்க வேண்டும் என்று கேட்பதாக புகார் மனு அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 25.02.2022 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு.ராஜேஷ், இளநிலை பொறியாளர் அவர்கள் லஞ்ச பணமான ரூ.10,000/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

**PRESS NOTE**

The complainant approached the Vigilance & Anti – Corruption, Krishnagiri Detachment, and gave complaint that he had applied for 3 phase electricity connection for his newly constructed milk chilling centre at the Office of the Kallavi, TANGEDCO, Krishnagiri district, for which Tr.Rajesh, Junior Engineer, TANGEDCO, Kallavi, Krishnagiri District demanded Rs.10,000/- as bribe money to process his application. In this connection a case was registered and a trap was organized today 25.02.2022.

During the course of trap proceedings, Tr.Rajesh, Junior Engineer, TANGEDCO, reiterated his earlier demand and received the bribe amount of Rs.10,000/- from the complainant. The accused was arrested.